வறுமையை ஒழிக்க

# பசிப்பிணி போக்கும் திட்டம்

## கருணாநிதி அறிவிப்பு

சென்னை, ஜூலை. 18–

தமிழ்நாட்டில் வறுமையை அறவே ஒழிக்கும் நோக்கத்தில், "பசிப்பிணி போக்கும் திட்டம்" கொண்டு வரப்படுகிறது.

சட்டசபையில் நேற்று பட்ஜெட் தாக்கல் செய்து பேசிய முதல்- அமைச்சர் கருணாநிதி கூறியதாவது:-

### பசிப்பிணி போக்கும் திட்டம்

★ மகாகவி பாரதியாரின் ஆசையை நிறைவு செய்திட ஏழ்மையால் ஏற்படும் பசிக் கொடுமையை அறவே களைய பசிப்பிணி போக்கும் திட்டம் ஒன்றைப் புதிதாக இந்த அரசு செயல்படுத்தும். வறுமையை ஒழிக்கவும், மக்களில் பல்வேறு தொகுதியினருக்குத் தேவைப்படும் சத்துணவை வழங்கவும் ஏற்கனவே பல திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. அத்திட்டங்களின் கீழ் வராத பிரிவினர்களைக் கண்டறிந்து, அவர்களுக்கும் பயனளிக்கும் வகையில் இந்தப் பசிப்பிணி போக்கும் திட்டம் அமையும். இதற்கான விரிவான செயலாக்கத் திட்ட அறிக்கையை டாக்டர் எம்.எஸ். சுவாமிநாதன் உதவியுடன் வெகுவிரைவில் உருவாக்க நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

★ சத்துணவு திட்டத்துக்கு நிதி ஒதுக்கீடு ரூ.401 கோடியாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

### 69 சதவீத இட ஒதுக்கீடு

கல்வியிலும், வேலை வாய்ப்பிலும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் ஆகியோரது நலனை மேம்படுத்துவதற்குத் தந்தை பெரியாரும், பேரறிஞர் அண்ணாவும், பெருந்தலைவர் காமராஜரும் ஆற்றிய இடைவிடாதப் பணிகளைத் தொடர்ந்து, பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், மிகவும் பிற்படுத்தப்பட்டவகுப்பினர், 69 சதவீத இட ஒதுக்கீட்டின் பயன் முழுவதையும் பெறுவதை நிலை நிறுத்த, இந்த அரசு முழு அளவில் உறுதி பூண்டுள்ளது.

★ ஆதிதிராவிடர் பழங்குடியினர் நலனுக்காக நிதி ஒதுக்கீடு ரூ.267.39 கோடியாக உயர்த்தப்பட்டுள்ளது.

★ குடிப்பழக்கத்தால் ஏற்படும் தீமைகளை மக்களுக்கு எடுத்துரைக்க 25 ஆயிரம் மகளிருக்கு வேலைவாய்ப்பு அளிக்கப்படும்.

### மகளிர் மேம்பாடு

★ மகளிர் மேம்பாட்டு திட்டத்தை ரூ.1420 கோடி செலவில் மாநிலம் முழுவதும் நீட்டிக்க அரசு முடிவு செய்துள்ளது.

★ கைத்தறி நெசவாளர் நலனுக்கு ரூ.65 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

★ கூட்டுறவு சங்கங்களில் உறுப்பினராக உள்ள கைத்தறி நெசவாளர்கள் 58 வயது அடையும் முன்னர் இறக்க நேரிடில், வாரிசுதாரர்களுக்கு ஆயுள் காப்பீட்டு நிறுவனம் வழங்கும் காப்பீட்டுத் தொகை ரூ.25,000 ஆக உயர்த்தப்படும். இதற்கு தகுந்த தவணைத் தொகையை அரசு செலுத்தும். இச்சலுகையை பெற 58 வயதாக இருந்த உச்சவரம்பு 60 வயதாக உயர்த்தப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் ஒரு லட்சத்து பத்தாயிரம் கைத்தறி நெசவாளர்கள் பயன் பெறுவர்.

★ 1989ஆம் ஆண்டு கழக ஆட்சியில் பத்திரிகையாளர்களுக்கான ஒய்வூதியம் திங்கள் ஒன்றுக்கு ரூ.250லிருந்து ரூ.400 ஆக உயர்த்தப்பட்டது. 1992-ல் ரூ.500 ஆக உயர்த்தப்பட்டது இப்போது ஒய்வூதியம் திங்கள் ஒன்றுக்கு ரூ.1000 என்று வழங்க முடிவெடுக்கப்பட்டுள்ளது.

### சட்டப் பல்கலைக் கழகம்

★ சென்னை உயர்நீதி மன்றத்தின் கிளை ஒன்றை மதுரையில் அமைப்பதற்காக இடம் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது. தற்காலிகமாக மதுரை மாவட்ட நீதிமன்றத்தின் வளாகத்திலேயே இந்தக் கிளையைத் துவக்கி வைக்க உயர்நீதி மன்றத்தின் ஒப்புதல் கோரப்படும்.

★ இந்த சட்டமன்றத் தொடரில் சென்னையில் டாக்டர் அம்பேத்கார் பெயரில் சட்டப் பல்கலைக் கழகம் அமைப்பதற்காக சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப்பட்டு அப்பல்கலைக் கழகம் நடப்பாண்டிலேயே செயல்படத் தொடங்குவதற்கு அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படும்.

★ திருநெல்வேலியில் சட்டக் கல்லூரி ஒன்றைத் தொடங்க வேண்டுமென்ற நீண்ட காலக் கோரிக்கையை நிறைவேற்றும் வண்ணம் இந்தக் கல்லூரி நடப்பு நிதியாண்டிலேயே தொடங்கப்படும்.

### காவிரிப் பிரச்சினை

நடுவர்மன்ற அமைப்புக்கு உள்ளிட்ட நிலையில் அதன் தீர்ப்புக்கு ஏற்ப, காவிரி நீரில் தமிழகத்து உரிமையைப் பெற சட்ட ரீதியாகவும், அரசியல் மாச்சரியங்களுக்கு அப்பாற்பட்ட அணுகுமுறையிலும் நடவடிக்கைகளை மேற்கொள்வதில் நாம் உறவுக்கு கை கொடுப்போம், உரிமைக்குக் குரல் கொடுப்போம் என்ற நிலையில் உறுதியாக இருக்கிறோம்.

### ஊழல் ஒழிப்பு

★ இந்த அரசை உருவாக்க மக்கள் அளித்துள்ள தீர்ப்பு ஊழலை ஒழிப்பதற்காகவும், ஊழல் செய்தவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுத்து அவர்களுக்கு உரிய தண்டனையை வழங்க வேண்டும் என்பதற்காகவும்தான். அதே நேரத்தில் இனி ஊழல் நடைபெறாமல் தடுக்கவும் ஏற்ற நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். இந்த பிரச்சினை குறித்து ஒருங்கிணைந்த முறையிலே ஆய்வு செய்து தேவையான சீர்திருத்தங்களை அரசுக்குப் பரிந்துரைக்க ஓர் உயர்நிலை குழு உடனடியாக உருவாக்கப்படும்.

★ பல்வேறு தேசிய இனங்களைக் கொண்ட நமது நாட்டில் ஒருமைப்பாடு வலுப்பெற்ற நிலை பெற்றிருக்க மாநில உரிமைகள் உண்மையான சுயாட்சித் தத்துவத்துடன் வழங்கப்பட்டாக வேண்டும் என்பதிலும், இந்தி ஆதிக்கத்திற்கு இடம் தராமல் மாநிலங்களின் ஆட்சி மொழிகள் அனைத்துமே மைய ஆட்சி மொழிகளாக ஆக வேண்டும் என்பதிலும் முதற் கட்டமாக தமிழையும் மைய ஆட்சி மொழியாக்க வேண்டுமென்பதிலும், இந்த அரசு உறுதியுடன் இருக்குமெனச் சூளுரைக்கிறேன்.

### திட்ட அளவு ரூ.3,700 கோடி

★ நடப்பு நிதிஆண்டில் திட்ட அளவு இன்னும் மையத் திட்டக் குழுவுடன் கலந்துரையாடி இறுதி செய்யப்படவில்லை. புதிய திட்டங்களுக்குச் செய்யப்பட்டுள்ள நிதி ஒதுக்கீடுகளாலும், 1996-97 ஆண்டுத் திட்டம் ரூ.3700 கோடி அளவுக்கு உயரும். நடப்பு நிதியாண்டில் மார்ச் வரை எட்டு மாதங்கள் மட்டுமே இருப்பதனால், இந்த திட்ட ஒதுக்கீட்டை ரூ.3700 கோடி அளவிலேயே அறுதியிட்டுள்ளோம். இந்த திட்ட ஒதுக்கீடு 1995-96ஆம் ஆண்டில் ஏற்பளிக்கப்பட்ட திட்ட ஒதுக்கீட்டைக் காட்டிலும், 15.63 விழுக்காடு கூடுதலாகும்.

### பறக்கும் ரெயில் திட்டத்துக்கு ரூ.50 கோடி

★ ரெயில்வே அமைச்சகத்தால் சென்னை பெருநகரில் செயல்படுத்தப்பட்டு வரும் துரிதப் போக்குவர்த்து (பறக்கும் ரெயில்) திட்டத்தின் இரண்டாம் கட்டப்பணி, லஸ்ஸிலிருந்து வேளச்சேரி வரை நீட்டிக்கப்பட வேண்டும். இதற்கான நிதி ஒதுக்கீட்டில் மூன்றில் இரண்டு பங்கை மாநில அரசு ஏற்கும் என இதற்கு முந்தைய அரசு மைய அரசுக்குக் கொடுத்த உறுதி மொழியின் அடிப்படையில் அந்தத் திட்டத்தை விரைவு படுத்த வரவு- செலவுத் திட்டத்தில் ரூ.50 கோடி நிதி ஒதுக்கீடு செய்துள்ளோம்.

★ சென்னை பெருநகர் அடிப்படை மேம்பாட்டு நிறுவனத்துக்கு ரூ.50 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### உதவித் தொகை அதிகரிப்பு

★ தமிழ் மொழிக் காவலர்கள் 1935 பேரும், அகவை முதிர்ந்த தமிழ் அறிஞர்கள்441 பேரும் நலிந்த கலைஞர்கள் 4267 பேரும் பயனடையும் வகையில் வழங்கப்படும் உதவித் தொகை மாதம் ஒன்றுக்கு ரூ.400 என்பது ரூ.500 ஆக உயர்த்தப்படும்.

1,778 உலமாக்கள் தற்போது பெற்று வரும் மாத ஒய்வூதியத் தொகையான ரூ400 என்பது ரூ.500 ஆக உயர்த்தப்படும். அதேபோல், ஓதுவார்கள் 100 பேரும், மறை மற்றும் திவ்விய பிரபந்தத்தை ஓதியவர்கள், அரையர் சேவை செய்தவர்கள் 100 பேரும், அர்ச்சகர்கள் 500 பேரும் பயனடையும் வகையில் தற்போது அவர்கள் பெறும் ஒய்வூதியத் தொகை

(1-ம் பத்தி பார்க்க)

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS